மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தக் கருத்தை கல்வித் துறையில் ஆலோசனை செய்து, அதன்மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) நெல் கொள்முதல் நிலையங்களை அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

முற்பகல் 10-05

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுவை அறுவடை தொடங்கியிருக்கிறது. ஆனால், அரசு கொள்முதல் நிலையங்களைப் போதுமான அளவிற்கு திறந்து, நெல்லை கொள்முதல் செய்யாத காரணத்தினாலே மிகக் குறைவான விலைக்கு விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் நெல்லை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் விவசாயிகள் பெரிதும் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, கொள்முதல் நிலையங்களை உடனடியாகத் திறப்பது சம்பந்தமாக கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் உள்ளது. தயவுசெய்து அமருங்கள்.

(உ) திருப்பூர் மாவட்டம், விசைத்தறித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் விசைத்தறி தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் பற்றிச் சொன்னார்கள். அதற்கு பதில் தர இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதில் இருந்தால் அளிக்கலாம். (குறுக்கீடுகள்) நீங்கள் பிரச்சினையை சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் எழுப்பும் பிரச்சினை அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும்.

மாண்புமிகு அமைச்சர் பதில் அளிக்கலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நீங்கள் உங்கள் கருத்துகளைக் கூறுங்கள். (குறுக்கீடுகள்) ஏற்கெனவே இதுபற்றிச் சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, திருப்பூர் மாவட்டங்களில் கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர்கள் சுமார் *20,000* பேர்கள் உள்ளனர். இவர்கள் ஜவுளி உற்பத்தியாளர்களிடமிருந்து நூல் பெற்று, அதனை தங்கள் விசைத்தறிகளில் காடாத் துணி நெசவு செய்து, ஜவுளி உற்பத்தியாளர்களுக்கு வழங்கி வருகின்றனர்.

தற்போது விசைத்தறி உரிமையாளர்கள் *100* சதவீதம் கூலி உயர்வு, இரண்டு shift–க்கு பதிலாக ஒரு shift, ஒரு தொழிலாளி ஆறு தறிக்கு மேல் ஓட்டக்கூடாது என ஜவுளி உற்பத்தியாளர்களிடம் கோரிக்கைகள் வைத்து போராடி வருகின்றனர். இது குறித்து பல்வேறு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு, தொழில் அமைதி பாதிக்காதவண்ணம் செயல்பட இரு தரப்பினருக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், கூலி உயர்வு குறித்து கோவை துணை ஆணையர் (தொழிலாளர் நலன்) அவர்கள் முன்னிலையில் ஜவுளி உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் விசைத்தறி உற்பத்தியாளர்கள் சங்கம் ஆகியோரிடம் *5-9-2011* அன்று பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதில் போராட்டத்தைக் கைவிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இன்று கோவை மற்றும் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. அது இன்று கண்டிப்பாக சுமுகமாக முடிந்து விடும். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் தொழிலாளர் நலமும், தொழில் வளர்ச்சியும் கண்டிப்பாக பாதுகாக்கப்படும் என்பதை இந்த அவையின்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

(ஈ) நெல் கொள்முதல் நிலையங்களை அமைத்தல்—
தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் நெல் கொள்முதல் குறித்து எழுப்பிய பிரச்சினைக்கு மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. புத்திசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விவசாயிகள் அறுவடை செய்கின்ற நெல்லை கொள்முதல் செய்ய, கொள்முதல் நிலையங்கள் பரவலாக எல்லா இடங்களிலும் அமைக்க வேண்டுமென்று கோரியிருந்தார்கள். புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனைத்து விவசாயிகளிடமிருந்தும் நெல்லை கொள்முதல் செய்ய, அனைத்து இடங்களிலும் கொள்முதல் நிலையங்களை அமைத்திருக்கிறது. தேவைப்பட்டால் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்முதல் செய்ய தேவையான இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. மானியக் கோரிக்கைகள், 2011-2012, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 4-ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2011-2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். 5–9–2011 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீதான விவாதத்திற்குப் பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவி, தியாகத் திருவிளக்கு, மகத்தில் பிறந்து ஜெகத்தை ஆளவந்த எங்கள் மாதரசி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது கோடானுகோடி வணக்கங்களை தங்களின் பொற்பாதங்களில் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஒன்றியம், நம்பம்பட்டி என்னும் குக்கிராமத்தில் ஒரு சாதாரண ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்கு, 1972 ஆம் ஆண்டு முதல், தொடர்ந்து கிளைக் கழகச் செயலாளராகவும், 2009 முதல் ஊராட்சி கழகச் செயலாளராகவும் பணியாற்றிட வாய்ப்பு வழங்கி உள்ளீர்கள் அம்மா!